**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : | |
| Preliminary Register : | | Case No. | : | **S.C.37/2024** |
| Sessions : | | | | |
| | | Prosecution | : | **P.W. 3** |
| Deposition of witness for : | | Defence | : | **D.W.** |
| | | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | வளர்மதி | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **11.08.2026.**

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் முன்னிலை.**

**முதல் விசாரணை:**

நான் மாக்காய்குளத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது சித்தப்பா ராமச்சந்திரனுக்கும் மணிகண்டன் குடும்பத்தாருக்கும் 3 வருடமாக முன்விரோதம் இருந்தது. 2022 முன்பு 3 வருடங்களாக முன்விரோதம் இருந்தது. ராமச்சந்திரன் சித்தப்பாவிற்கு ஊருக்கு வடக்கே காடுஉள்ளது. காட்டுக்கு போகும்பாதையை மணிகண்டன் JCBவிட்டு நோண்டிவிட்டார். எனது சித்தப்பா ஊர்க்காரர்களை அழைத்துசென்று கேட்க போனார். கேட்டபோது நான் இப்படி செய்வேன் நீ என்ன செய்வ என்று சண்டைஆகிவிட்டது. என்சித்தப்பாவை வீட்டிற்கு அழைத்துவந்துவிட்டோம். மறுநாள் காலை 05.00 மணிக்கு மெட்ராஸ்சில் இருந்து 10பேரை அழைத்து வந்து அடித்துபோட்டுவிட்டார்கள். அவர்கள் பாண்டியன், மணிகண்டன், நம்பிராஜன், செல்லதுரை, பாலமுருகன், அஜித், முருகன், ஆனந்த், சிவசாமி, நடராஜன், மணிகண்டன் மனைவி ராதிகா, பாண்டியன் மனைவி மணிமேகலை, நடராஜன் மனைவி பாப்பாத்தி ஆகியோர்கள் வந்து ராமச்சந்திரனையும், லலிதா,

ரேணுகாதேவி மற்றும் வேல்முருகன் ஆகியோர்களை அடித்துபோட்டு கை, கால்களை உடைத்துபோட்டுவிட்டார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. நாங்கள் அனைவரையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துசென்று விட்டோம். அதன்பிறகு குன்னம் காவல்நிலையம் வந்து நாங்கள் புகார் கொடுத்தோம். போலிசார் வந்து மருத்துவமனையில் விசாரித்தார்கள். லலிதாவுக்கு ஆப்ரேசன் செய்தார்கள். அதன்பிறகு வீட்டிற்கு வந்து கேஸை வாபஸ் வாங்க சொல்லி ரேணுகாதேவியை அடித்துவிட்டார்கள். மாரியம்மாளை அடித்ததாகவும் குன்னம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். இந்த பிரச்சனை இப்படியே ஓடிக்கொண்டிருந்தது. பின்பு 25.08.2022ம் தேதி மதியம் 01.00 மணிக்கு நானும், என்சித்தப்பா ராமச்சந்திரனும் விதை சோளம் வாங்க அரியலூருக்கு போனோம். நாங்கள் போய் பைக்கை நிப்பாட்டும்போது செல்லதுரை வந்து பைக்கை குத்தினார். உடனே எனது சித்தப்பா வந்து ஏண்டா என்வண்டியை குத்தினாய் என்று கேட்டார். உடனே அரியலூர் வந்து என்வண்டியை குத்திரியே நீ அரியலுரில் எப்படி கடை நடத்துகிறாய் என்று பார்த்துவிடுகிறேன் என்று சொன்னார். உடனே நான் செல்லதுரை சின்னபையன் சித்தப்பா என்று சொன்னேன். நீ என்னடா பண்ணுவ என்று கையை சொடுக்கி என்னையே தொட்டுவிட்டாயா என்று செல்லதுரை 10 முறை கேட்டார். உன்னை 2நாளில் தீர்த்து கட்டிவிடுகிறேன்எ ன்று சொன்னார். அதன்பிறகு எனது சித்தப்பா சமாதானம் செய்து விதைவாங்கிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். 27.08.2022ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் எனது சித்தப்பா வீட்டிற்கு சென்றேன். அப்போது அவர் பெரிய மகள் துர்கா கணவருடன் குழந்தையை அழைத்துகொண்டு சென்னையிலிருந்து Express Trainல் வருவதாக என்சித்தப்பா என்னிடம் சொன்னார். என்சித்தப்பா ஒரு வண்டியில் தனியாக போனார். அ.சா.1, 2 மற்றொரு வண்டியில் அவருக்கு பின்னால் சென்றார்கள். அவர்கள் போயி 20 நிமிடம் கழித்து எனக்கு போனவந்தது. அதில் செல்லதுரை என்பவன் என்சித்தப்பாவை பின்மண்டையில் வெட்டிவிட்டார் என்றும், மணிகண்டன் இரும்புகம்பியால் தோள்பட்டையில் அடித்துவிட்டார் என்றும், பாலமுருகன்

கம்பியாலும், இடது தொடையிலும், நம்பிராஜா இடது கால்களிலும் அடித்துவிட்டார்கள் என்னிடம் சொன்னார்கள். போன்வந்த பிறகு நான் சம்பவஇடம் சென்றேன். அங்குபோய் நான் பார்த்தபோது ராமச்சந்திரனுக்கு உயிர் இருக்கிறதா என்று பார்த்தேன். அதன்பிறகு ஆம்புலன்சு உயிர் இல்லை என்று சொல்லி திரும்பி போய்விட்டது. பிறகு வேறு ஆம்புலன்சு வந்து அதில் அழைத்து சென்றார்கள். அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். அதன்பிறகு குன்னம் காவல்நிலையத்திற்கு லலிதாவுடன் நானும், புகார் கொடுக்க போனேன். ஆம்புலன்சில் லலிதா உடன் சென்றார். போலிசார் வந்து அரசு மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். பிறகு போஸ்மாட்டம் செய்து சடலத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்வீட்டிற்கும் அசா.1 வீட்டிற்கும் இடையே சுமார் 5 1/2 மீட்டர் இருக்கும். பாதையில் குழிதோண்டியது சம்மந்தமாகவும், இதுசம்மந்மாக ராமச்சந்திரன் ஊர்க்காரர்கள் அழைத்து சென்று எதிரிகளை கேட்டதாகவும், மறுநாள் காலையில் சென்னையிலிருந்து ஆட்களை அழைத்துகொண்டு பாண்டியன், மணிகண்டன், நம்பிராஜன், செல்லதுரை, பாலமுருகன், அஜித், முருகன், ஆனந்த், சிவசாமி, நடராஜன், மணிகண்டன் மனைவி ராதிகா, பாண்டியன் மனைவி மணிமேகலை, நடராஜன் மனைவி பாப்பாத்தி ஆகியோரிடம் கேட்டும், ராமசந்திரன்,லலிதா, வேல்முருகன் ஆகியோர்களை கை, கால்களை அடித்தும், முதல்விசாரணையில் சொல்லி விவரங்களை நான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. 25.08.2022ம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு காட்டுக்கு மருந்துவாங்குவதற்காக வந்தபோது ராமச்சந்திரன் பைக்கில் மோதிய விவரத்தை நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. 25.08.2022 தேதி மருந்து வாங்க சென்றபோது நடந்த சம்பவம் தொடர்பாக 27.08.2022ம் தேதி வரை நான் யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். கேஸ்வாபஸ் வாங்க சொல்லி யாரும் அ.சா.1 மாமியார் மற்றும் அ.சா.1ன் மகளை மிரட்டவில்லை

என்றால் சரியல்ல. 27.08.2022ம் தேதி மாலை 04.00 மணிக்கு அ.சா.1வீட்டிற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் என்னுடைய சித்தப்பா என்பதாற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-Dr. Sathiyamurthy,
Principal District Judge,
Perambalur.